அவர்கள் குடிநீர்ப் பிரச்சினைக்காக எங்களையெல்லாம் அழைத்துப் பேசுவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

125—

சட்ட ஆட்சிமொழி ஆணையம்

***3233—திரு. S. செம்மலை:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்ட ஆட்சிமொழி ஆணையத்தை மீண்டும் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையத்தை மீண்டும் அமைக்கும் கருத்துரு எதுவும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள்.

திரு. S. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டங்கள், மத்தியச் சட்டங்கள், அதுபோல அவசரச் சட்டங்கள், அறிவிக்கைகள், விதிகள் இவையெல்லாம் இன்றைக்கு நிறைய இருந்தாலும் அனைத்து மக்களிடமும் இந்தச் சட்ட அறிவு, சட்ட விழிப்புணர்வு ஏற்பட்டு இருக்கிறதா என்று சொன்னால், எதிர்பார்த்த அளவிற்கு அடித்தட்டு மக்களை இந்தச் சட்டங்கள் போய்ச் சேரவில்லை. இதற்காகத்தான் 1961–ல்

2017 ஜுலை 4]

Central Official Language (Legislative) Commission ஆரம்பிக்கப்பட்ட பிறகு அந்தக் கமிஷனுடைய வழிகாட்டுதலின்படி மாநிலத்திலே சட்ட ஆட்சிமொழி ஆணையம் 1965–ல் அமைக்கப்பட்டது. இப்போது அந்த ஆணையம் சட்டத் துறையினுடைய ஒரு பிரிவோடு சேர்க்கப்பட்டு, அதற்கு ஒரு கூடுதல் செயலாளரை இன்றைக்கு பொறுப்பு ஏற்கச் செய்து அந்தப் பணிகளைச் செய்து வருகிறார்கள். நான் வலியுறுத்திச் சொல்வது என்னவென்றால், இந்தச் சட்டங்களை தமிழாக்கம் செய்து அனைத்து மக்களுக்கும் சட்ட அறிவைக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் அந்த ஆணையம் அமைக்கப்பட்டது. இப்போது அந்தத் துறையோடு சேர்க்கப்பட்ட பிறகு, அந்தப் பணியில் ஒரு தொய்வு ஏற்பட்டிருக்கின்றது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் இன்று கேரளாவில் இந்தக் கமிஷன் இருக்கிறது. அந்தக் கமிஷன் 255 மத்தியச் சட்டங்களை அந்த மாநில மொழியில் மொழியாக்கம் செய்து வெளியிட்டிருக்கின்றார்கள். ஆனால், 1965–ல் துவக்கப்பட்ட அந்த ஆணையம் கலைக்கப்பட்டு, இப்போது அது சட்டத் துறையோடு சேர்க்கப்பட்ட பிறகு அந்தப் பணியில் தொய்வு ஏற்படுகிற நிலையுள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 103 சட்டங்கள்தான் மொழியாக்கம் செய்யப்பட்டு, அதிலும் 65 சட்டங்கள்தான் அச்சடிக்கப்பட்டு வெளியில் வந்திருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் மீண்டும் கேட்டுக்கொள்வது, எந்த நோக்கத்திற்காக இந்த ஆணையம் அமைக்கப்பட்டதோ அதை நிறைவேற்ற வேண்டும். இப்போது Law Commission–க்கு எப்படி ஓர் ஓய்வு பெற்ற நீதிபதி மற்றும் சட்ட வல்லுநர்கள் 5 பேர் கொண்ட கமிஷனை அமைத்திருக்கின்றீர்களோ அதேபோன்று, இந்த ஆணையத்தையும் மீண்டும் புதுப்பித்து, இந்த நோக்கம் நிறைவேறுகின்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து, மீண்டும் இந்த ஆணையத்தை அமைப்பீர்களேயானால், அந்தப் பணி, அந்த நோக்கம் முழுமையாக நிறைவேறும். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும் சட்டம் பயின்றவர், சட்டம் தெரிந்தவர். தயவுசெய்து, இந்த ஆணையத்தினுடைய முக்கியத்துவத்தை அறிந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி மீண்டும் இந்த ஆணையத்தை உருவாக்கினால் உங்களுக்கும் அந்த

credit போய்ச் சேரும், இந்த ஆட்சிக்கும் அந்தப் பெருமை சேரும். எனவே, மறுபரிசீலனை செய்ய இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில சட்டமொழி ஆணையம் 1965 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, பின்னர் 1992 ஆம் ஆண்டு சட்டத் துறையோடு இணைக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல, கூடுதல் செயலாளரின்கீழ் இந்த ஆணையம் இயங்கி வந்தது. தற்போது அந்த ஆணையம் மீண்டும் சட்டத் துறையினுடைய நேரடிக் கட்டுப்பாட்டிலே, செயலாளர் அவர்களின் தலைமையின்கீழ், 2014 ஆம் ஆண்டு முதல் இயங்கிக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, சட்ட ஆணையம் மத்தியச் சட்டங்கள், மாநிலச் சட்டங்கள், விரைவு சட்டங்களின் விதிகளைத் தமிழிலே மொழி பெயர்த்து, புத்தகங்களாக அச்சடித்துக் கொடுக்கின்ற பணியைச் செய்து வருகிறது. அந்தப் பணியை சட்டத் துறையே செய்து கொண்டு வருவதால், இரண்டு பணிகளும் ஒரே பணி என்பதால், அது சட்டத் துறையின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கேரள மாநிலத்திலே தற்போது கிட்டத்தட்ட 255 மத்தியச் சட்டங்கள் மாநில மொழியிலே மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கின்றார். தமிழக அரசின் சட்டத் துறையின்கீழ் இந்தப் பணி கொண்டுவரப்பட்டு, இதுவரை 200 மையச் சட்டங்கள் தமிழிலே மொழியாக்கம் செய்யப்பட்டு புத்தக வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. 47 மாநிலச் சட்டங்கள் தமிழிலே மொழியாக்கம் செய்யப்பட்டு புத்தக வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 2011 ஆம் ஆண்டிலிருந்து இன்றைய தேதி வரை 121 மத்தியச் சட்டங்கள் தமிழிலே மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. 33 மாநிலச் சட்டங்கள் தமிழிலே மொழியாக்கம் செய்யப்பட்டு, அதைப் புத்தக வடிவிலே கொண்டு வருவதற்கான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்

2017 ஜூலை 4]

அவர்கள், சட்ட ஆட்சிமொழி ஆணையம் அமைத்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லியிருக்கின்றார். அவர் கூறிய கருத்தை சட்டத் துறையுடன் கலந்தாலோசித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, தேவை ஏற்படும்பட்சத்திலே, கண்டிப்பாக அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள்.*

திரு. S. செம்மலை: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்ட ஆட்சிமொழி ஆணையத்தினுடைய மிக முக்கிய பணி, சட்டச் சொற்களை உருவாக்குவது. சட்டச் சொற்களை உருவாக்கி, சட்ட அகராதியை வெளியிடுவதுதான் அந்த ஆணையத்தினுடைய மிக முக்கியப் பணியாக இருந்து வந்தது. இப்பொழுது சட்டத் துறையோடு சேர்ந்துவிட்டபடியால், அந்தப் பணி முற்றிலுமாக நிறுத்தப்பட்டுவிட்டது. பொதுவாக, சட்டச் சொற்கள் இலத்தீன் மொழியிலும், ஆங்கில மொழியிலும்தான் அதிகமாக இருக்கும். எனவே, அந்தச் சொற்களுக்கு இணையாக, தமிழ்ச் சொற்களை நிறைவாக, புதிதாகக் கண்டுபிடிக்க வேண்டும். எனவே, இந்தத் துறையைச் சார்ந்த கூடுதல் செயலாளர் அல்லது துறை அலுவலர்கள் இந்தப் பணியைச் செய்ய முடியுமா என்று சொன்னால், நிச்சயமாக செய்ய முடியாது. எனவேதான் சொல்கிறேன், ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதிபதியைத் தலைவராகக் கொண்டு, சட்ட வல்லுநர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இந்த ஆணையம் அமைக்கப்படுமேயானால், இதுபோன்ற சட்டச் சொற்களை மொழி பெயர்க்க அல்லது புதிதாக உருவாக்க இந்த ஆணையம் உதவியாக இருக்கும். எனவே, நான் மீண்டும், மீண்டும் சொல்கிறேன், இந்த ஆணையம் அமைப்பது நல்லது; இதன் நோக்கம் நிறைவேறும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, இந்த ஆணையத்தை மீண்டும் புதுப்பித்தால், நீங்கள் சட்டத் துறைக்கு ஆற்றுகிற மிகப்பெரிய பங்காக இருக்கும். எனவே, தயவுசெய்து மீண்டும் இந்தக் கோரிக்கையை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, சட்டச் சொற்களை உருவாக்குவது, சட்ட அகராதியை உருவாக்குவதுதான் சட்ட ஆணையத்தினுடைய மிக முக்கிய பணியாகும். அதை ஏற்றுக்கொள்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து, நல்ல கருத்து. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுருக்கமாகத்தான் கேட்கிறேன். சட்ட ஆட்சிமொழி ஆணையம் அமைக்கப்பட வேண்டும். அது நிச்சயமாக உறுதுணையாக இருக்கும். அதில் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. அதேநேரத்தில், கீழமை நீதிமன்றங்கள் மற்றும் உயர் நீதிமன்றத்தில் ஆட்சி மொழியாகத் தமிழ் மொழி வர வேண்டுமென்று பல்வேறு நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மாமன்றத்தில் உள்ள பலருக்கும் அந்தக் கருத்து இருக்கிறது. எனவே, தமிழை ஆட்சி மொழியாக நீதிமன்றங்களில் வலியுறுத்தக்கூடிய சட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு நிறைவேற்ற முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, அறிய விரும்புகிறேன் என்று சொல்லுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: உயர் நீதிமன்றத்திற்கும் சேர்த்து நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும். அதற்கு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முடித்துவிடுகிறேன். அதாவது உயர் நீதிமன்றத்திற்கும் சேர்த்து, கீழமை நீதிமன்றங்கள் உங்கள் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன.

2017 ஜூலை 4]

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, நீங்கள் உட்காருங்கள். போதும். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு)

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்திலும் தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு வருவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும், அதற்கான சட்டத்தையும் அவையில் நிறைவேற்ற வேண்டுமென்ற கோரிக்கையை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் முன்வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வழக்கறிஞராக இருப்பவர். உயர் நீதிமன்றத்தில் தமிழை ஆட்சி மொழியாக்குவதற்கான சட்டத்தைக் கொண்டுவரும் அதிகாரம் நம்மிடம் இல்லை என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். உச்ச நீதிமன்ற முழு அமர்வு அதற்கு அனுமதியளிக்க வேண்டும். அதற்குப்பிறகு, மத்திய அரசு அதற்கான சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் இருக்கின்றபோது 2011 ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலே அதற்கான நடவடிக்கைகள் குறித்து தெரிவித்திருந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களையும் நேரடியாகச் சந்தித்து கோரிக்கை வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, உச்ச நீதிமன்றத்தின் முழு அமர்வு ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, தமிழை ஆட்சிமொழியாக ஏற்க முடியாது என்று தெரிவித்து நிராகரித்துவிட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் அழுத்தம் கொடுத்ததன் காரணமாக, முழு அமர்வு முன்பாக மீண்டும் ஆய்வுக்குக் கொண்டுவருவதாக உறுதி அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, உயர் நீதிமன்றத்தில் தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டு வருவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து

மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தின் சார்பாக, விழுப்புரம் நகரத்தில் சட்டக் கல்லூரி அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். சட்டக் கல்லூரி அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுவிட்டதா? அந்த இடம் பொதுவான இடமாக இருக்க வேண்டும். புதிய இடத்தில் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும். அதற்கான இடம் கையகப்படுத்தும் பணிகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விழுப்புரத்தில் புதிதாக சட்டக் கல்லூரி அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியளித்திருக்கிறார்கள். இந்த ஆண்டே மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. விழுப்புரம் நகரத்தில் இயங்கி வருகிற பழைய தாலுகா அலுவலகத்தில் தற்காலிகமாக சட்டக் கல்லூரி இயங்குவதற்கு அனைத்துப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. சட்டக் கல்லூரியை நிரந்தரமாக அமைப்பதற்காக நகராட்சி இடம் தேர்வு செய்யப்பட்டுவிட்டது. நகராட்சியிடமிருந்து நேற்றுதான் அதற்கான அனுமதியும் பெறப்பட்டது. நகராட்சிக்குச் சொந்தமான இடத்திற்காக 6 கோடியே 33 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாயை வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

2017 ஜூலை 4]

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தில் தமிழை ஆட்சி மொழியாக, வழக்காடும் மொழியாக ஆக்க வேண்டுமென்பதற்காக இந்த அவையில் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கின்றபோது ஏற்கெனவே தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார்கள். அந்தத் தீர்மானத்தை அப்போது உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த நீதியரசர் திரு. ஷா அவர்கள்கூட ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் இதுகுறித்து 'எந்தப் பிரச்சினையும் எங்களுக்கு இல்லை' என்று தெரிவித்து, அவர்களும் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தார்கள். அவையில் நாம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினோம். உயர் நீதிமன்றமும் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்து, அவை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. மத்திய அரசிடம்தான் இன்னும் நிலுவையில் இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். மத்திய அரசு எப்படி இருக்கும் என்பது நமக்குத் தெரியும்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மற்றும் இந்த மாமன்றத்தினுடைய அனைத்து உறுப்பினர்களுடைய கோரிக்கையும் உயர் நீதிமன்றத்தில் தமிழை ஆட்சிமொழியாகவும், வழக்காடும் மொழியாகவும் கொண்டுவர வேண்டுமென்பதுதான். 4 மாநிலங்களில் உள்ள உயர் நீதிமன்றத்தில் அந்த மாநிலத்தினுடைய மொழி ஆட்சி மொழியாக எப்படி இருக்கின்றதோ, அதேபோன்று, தமிழ்நாடு உயர் நீதிமன்றத்தில் தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டுவருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உங்களுடைய ஒத்துழைப்புடன், கண்டிப்பாகத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*